# 18

# முஸ்லிம் வீட்டை அறிமுகப்படுத்துவோம்

இக்பால் ஹாஜியார், விடுமுறை நாளை நண்பனின் வீட்டில் கழிக்க விரும்பினார். மனைவியையும் பிள்ளைகளையும் அங்கு அழைத்துச் சென்றார். இரண்டு நாட்கள் தங்கிவிட்டு மீண்ட அவர்கள், அஸர் தொழுகைக்குப் பின்னர் ஒன்றாக அமர்ந்தனர். தமது அனுபவங்களைப் பகிர்ந்து கொண்டனர்.

எவ்வளவு அழகான வீடு. வீட்டைச் சுற்றி நிலம்: நிலம் முழுவதும் பயன்படுத்தப் பட்டிருக்கின்றது. முன்றலில் பூத்திருந்த வண்ண மலர்கள் உள்ளத்தைக் கொள்ளை கொண்டன. பக்கவாட்டில் கனி தரும் மரங்களும், பின் பக்கத்தில் தென்னந் தோப்புக்கிடையே மரக்கறிகளும், மூலிகைச் செடிகளும் காணப்பட்டன. இவ்வாறு ஆரம்பித்தார் தாய்.

‘உம்மா! வீட்டைப் பார்த்தீர்களா? ஆண்களும் பெண்களும் தனித்தனியாக உள்நுழைந்து, தனித்தனியாகக் கூடியிருந்து கதைப்பதற்கான ஒழுங்கில் அறைகள் அமைந்திருந்தன. வெவ்வேறு தேவைகளுக்காக இடங்களும் ஒதுக்கப்பட்டிருந்தன’ என்றாள் ஷிபா.

‘நீங்கள் முன்னறையை அவதானித்தீர்களா? நான் அதில் நுழைந்தபோது உள்ளம் பூரித்தது. ஒரு பக்கத்தில் நூல்கள் அலுமாரியில் அடுக்கி வைக்கப்பட்டி ருந்தன. முன் வாசலில் தெரிந்த சஞ்சிகைகள், பத்திரிகைகளின் பழைய பிரதிகள் வேறாக அடுக்கப்பட்டிருந்தன. இருந்து வாசிப்பதற்குப் பொருத்தமான கதிரைகள். எழுதுவதற்கான மேசை, காகிதாதிகள் காணப்பட்டன. தொழுவதற்கான ஒரு முஸல்லாவும் ஓதுவதற்கான முஸ்ஹபும் வைக்கப்பட்டிந்தன’ என்றான் ஜாவித்.

‘அதான் கூறப்பட்டதும் எல்லோரும் பள்ளிவாசலுக்குச் சென்றோம் அல்லவா? ஸுபஹ் ஜமாஅத்துக்குச் சிறுவன் அகீல் கூட வந்திருந்தானே. அது என் உள்ளத்தில் ஆழமாகப் பதிந்தது. பள்ளியிலிருந்து திரும்பியவர்கள் முஸ்ஹபைக் கையில் ஏந்தியவாறு கூட்டாகக் குர்ஆன் ஓதியதையும், அது முடிய சில அவ்ராதுகள் ஓதப்பட்டதையும் அவதானித்தேன். எவ்வளவு இனிமையாகவும் அமைதியாகவும் ஓதினார்கள்’ என்றான் ஹாமித்.



‘பெண்களும் அப்படித்தான். அதான் ஒலிப்பதற்கு முன்பே அவர்கள் விழித்தெழுந்தார்கள். தாயார் தொழுவிக்க பிள்ளைகள் பின்னால் நின்று தொழுதார்கள். நாமும் அவர்களுடன் சேர்ந்து தொழுதோம். ஆண்கள் பள்ளியிலிருந்து வரும்வரை பெண்களும் ஓதிக் கொண்டிருந்தார்கள். அன்றாட திக்ர்களிலும் ஈடுபட்டுக் கொண்டிருந்தார்கள்’ என்றாள் முனீரா.

நாங்கள் தொழுகைக்குத் தயாராக நின்றபோது முற்றம் கூட்டும் சத்தம் கேட்டது. ஸுபஹ் தொழுது முடிந்து அல் - குர்ஆன் ஓதிக் கொண்டிருந்தபோது தேனீர் பரிமாறப்பட்டது.’

‘உம்மா, தேனீர் பரிமாறப்பட்டபோது ஒரு கோப்பை கீழே விழுந்து உடைந்தது அல்லவா? அப்போது எல்லோரும் இன்னாலில்லாஹி... என்று கூறிக் கொண்டார் கள். எந்தப் பதற்றமுமில்லாமல் ஒரு சகோதரி அதை அப்புறப்படுத்தினார். ‘மன்னித்துக் கொள்ளுங்கள்’ என்று எங்களிடம் விண்ணப்பித்துக் கொண்டார். அது எனக்குப் புதுமையாகத் தெரிந்தது’ என்றாள் ஷிபா.

‘பகல்வேளை, சமையலறைக்குச் சென்றேன். அழகும், ஒழுங்கும், தூய்மையும் அங்கு தென்பட்டன. சமையலில் அவர்களுக்கு உதவத் தயாரானேன். அவர்கள் அதற்கு இடமளிக்கவில்லை. நீங்கள் பிள்ளைகளுடன் கதைத்துக் கொண்டிருங்கள். நாங்கள் வேலைகளைப் பிரித்துக் கொண்டிருக்கிறோம். அவரவருக்குரிய

வேலையை அவரவர் செய்து முடிப்பார்கள் என்று என்னை அழைத்து வந்தார்கள்' என்றார் தாய்.

'வீடு எவ்வளவு அழகாகவும் நேர்த்தியாகவும் இருந்தது திரைச்சீலைகள், தளபாடங்கள், அலங்காரங்கள் என்பன எளிமையாகவும் பொருத்தமாகவும் காணப்பட்டன. அது எங்களுக்கு முன்மாதிரியான வீடாகத் தெரிந்தது' என்றான் ஜாவித்.

'சரி பிள்ளைகளே, நீங்கள் வீட்டின் பௌதிகப் பொருள்களைத்தான் அதிகமாகக் கூறுகிறீர்கள். அந்த வீட்டாரின் குணநலன்கள் பற்றிக் கூற மாட்டீர்களா' எனக் கேட்டார் தந்தை.

'எங்களை வரவேற்றது முதல் பிரியாவிடை கூறும்வரை எங்களோடு அவர்கள் நடந்துகொண்ட முறை அலாதியானது. அவர்கள் ஒருவரை ஒருவர் சந்திக்கும் போது ஸலாம் சொல்லிக் கொண்டார்கள். **இன்ஷா அல்லாஹ், மாஷா அல்லாஹ், ஜஸாகல்லாஹு கைரா** என்ற வார்த்தைகள் பாரிமாறப்பட்டன. எங்களோடு கதைக்கும் போதும் உணவருந்தும் போதும் இதமாக நடந்துகொண்டார்கள். அவர்களின் முகத்தில் புன்முறுவல் தவழ்ந்தது. மென்மையான குரலில் பேசினார்கள். யாரும் யாரையும் கடிந்துகொள்ளவில்லை. எவரும் மற்றவர்களுக்கு ஏவவில்லை. அவர்களின் வானொலி கூட அவர்களைப் போன்று மெல்லிய குரலில் ஒலித்தது. அவ்வளவு தூரம் பக்கத்து வீட்டின் உரிமையை அவர்கள் பாதுகாக்கிறார்கள்' என்றாள் முனீரா.

'எங்களோடு வந்த அவர்களின் சிறிய தம்பி பள்ளியிலிருந்து வெளியேறிய போது இடதுகால் செருப்பை முதலில் அணிந்தார். இதனை அவதானித்த அவரது மூத்த சகோதரன் 'தம்பி, வலது கால் செருப்பை முதலில் அணிய வேண்டும் என்பதை மறந்து விட்டீர்களா' என்று தலையைத் தடவிக் கேட்டார். **'அஸ்த∴பிருல்லாஹ்'** என்று கூறியவாறு அவர் காலை மாற்றி அணிந்து கொண்டார். சிறுவர்களோடு எவ்வளவு இரக்கமாக நடந்து கொள்கிறார்கள்' என்றான் ஜாவித்.

'நான் இன்னொன்றை அவதானித்தேன். அவர்கள் எல்லோரும் தூங்கப் போகுமுன் வுழூச் செய்தார்கள். தூங்கி விழித்த பின் ஒருவருக்கொருவர் ஸலாம் கூறிக் கொண்டார்கள். காலையில் அல்குர்ஆனை ஓதிய பின் முன்னறைக்கு வந்து ஒரு குறிப்பிட்டளவு நேரம் புத்தகங்களை வாசித்தார்கள். எங்களுக்கும் புத்தகங்களை வாசிக்கத் தந்தார்கள். விருந்தினர்கள் வந்திருந்ததால் சகோதரி களுக்காக சில புத்தகங்களை உள்ளே கொண்டு சென்றார்கள்' என்றான் ஹாமித். 'ஆம் பெண்களும் வாசித்துக் கொண்டிருப்பதை நான் கண்டேன்' என்றாள் ஷிபா.

'மாலையில் அயல் வீட்டுப் பிள்ளைகளோடு சேர்ந்து எல்லோரும் விளையாடி னார்கள். எனது காலில் வலி இருந்ததால் நான் விளையாடவில்லை. ஆனால், அவர்கள் விளையாட்டில் பண்போடு நடந்து கொண்டார்கள். சண்டை பிடிக்காமல்,

கண்ணியக் குறைவாகப் பேசாமல் குறிப்பிட்ட நேரத்தில் அவர்கள் விளையாடி மகிழ்ந்தார்கள். அவர்கள் அறிவை வளர்க்கிறார்கள்; பண்பை விருத்தி செய்கிறார் கள்; உடம்பையும் சுகமாக வைத்திருக்கப் பயிற்சி பெறுகிறார்கள். அது மட்டுமா, விளையாட்டில் பங்கு கொண்ட அக்கம் பக்கத்துப் பிள்ளைகளுக்கு அகீல் முறுக்கு பங்கு வைத்ததையும் நான் மறக்க மாட்டேன்' என்றான் ஹாமித்.

உம்மா, நீங்கள் எப்போதும் அந்த மாமியோடுதான் சுற்றிக் கொண்டிருந்தீர்கள். ஏதாவது புதுமைகளைக் கண்டீர்களா? எனக் கேட்டாள் முனீரா. ''அங்கே ஒரு மூதாட்டியிருப்பதை நீங்கள் அவதானித்திருக்க மாட்டீர்கள். அவரால் நடமாட முடியவில்லை. அவரை ஒருவர் மாறி ஒருவர், பராமரிக்கும் முறையை அவதானித் தேன். தொழுவதற்கும், ஓதுவதற்கும் அவர்கள் பாட்டிக்கு உதவி செய்கிறார்கள். அல்குர்ஆன் பிரதியும், மூக்குக் கண்ணாடியும் கட்டிலுக்குப் பக்கத்தில் இருந்தன. அக்கம் பக்கத்திலுள்ள உறவினர்களும், அயலவர்களும் வந்து அவருடன் உரையாடிக் கொண்டிருந்தார்கள். நானும் அவருடன் உரையாடினேன். தனது வாழ்க்கை அனுபவங்களைப் பரிமாறிக் கொண்டார். அது எனக்குப் படிப்பினை யாகவும், பொழுதுபோக்காகவும் அமைந்தது.''

'வாப்பா, நீங்கள் மாமாவோடு நீண்ட நேரம் கதைத்துக் கொண்டிருந்தீர்கள். என்ன கதைத்தீர்கள் என்று சொல்லலாமா?' ஹாமித் கேட்டான்.

இரண்டு நாட்களாக உங்களோடு கூடிக் கதைக்கச் சந்தர்ப்பம் கிடைக்க வில்லை. அந்த ஏக்கம் ஹாமிதுக்கு ஏற்பட்டதுபோலும். விருந்தினராகச் சென்றுள்ள நாங்கள் அவர்களுக்குத் தொல்லை கொடுக்கக் கூடாது என்று முன்னரே குறிப்பிட்டிருந்தேன். நீங்கள் நடந்துகொண்ட முறையைப் பார்த்து மாமா சந்தோஷப்பட்டார். அடிக்கடி வரவேண்டுமென்று கேட்டுக்கொண்டார்.

நாங்கள் இருவரும், 'முஸ்லிம் குடும்பங்கள் எவ்வாறு நடந்துகொள்ள வேண்டும்' என்பதைப் பற்றித்தான் அதிகமாகக் கதைத்தோம். அவர் படித்த குடும்ப வாழ்க்கை பற்றிய சில புத்தகங்களை எனக்குக் காட்டினார். குடும்பங்களில் காணப்படுகின்ற சிக்கல்கள், தவறான நடைமுறைகள் பற்றி நாங்கள் உரையாடினோம்' என்றார் தந்தை.

'நல்லது, வானொலியில் செய்தி வாசிக்கப் போகிறார்கள். மக்ரிபுக்கும் நேரமாகிறது' என்று நினைவூட்டினார் தாயார்.

'எங்கள் விடுமுறை நாட்கள் திருப்தியாகவும், மகிழ்ச்சியாகவும், பயனுடையதாகவும் அமைய உதவிய அல்லாஹ்வுக்கே எல்லாப் புகழும். **அல்ஹம்துலில்லாஹ்'** என்று கூறிய தந்தை,

''விசுவாசிகளே, நீங்கள் உங்களையும், உங்கள் குடும்பத்தினரையும் நரக நெருப்பிலிருந்து பாதுகாத்துக் கொள்ளுங்கள்'' (66:6)

என்ற அல்குர்ஆன் ஆயத்தையும்,

‘‘ஆண் தனது குடும்பத்தின் பொறுப்பாளன்; அவன் தன் பொறுப்புக்குட்பட்டவர் கள் பற்றி விசாரிக்கப்படுவான். பெண் தன் கணவனின் வீட்டுக்குப் பொறுப்பாளர்; அவள் அந்தப் பொறுப்புக்கள் பற்றி விசாரிக்கப்படுவாள். அறிந்து கொள்ளுங்கள், நீங்கள் ஒவ்வொருவரும் பொறுப்பாளர்கள். தமது பொறுப்பு பற்றி விசாரிக்கப் படுவீர்கள்’’

என்ற ஹதீஸையும் அந்த மாமாவின் குடும்பத்தினர் பின்பற்றுவதை நான் அவதானித்தேன். அதற்கான ஒரு சந்தர்ப்பத்தை அல்லாஹ் எமக்கு ஏற்படுத்தித் தந்தான்’ என்று கூறி முடித்தார்.

அவர், ஸுப்ஹானகல்லாஹும்ம.... என்ற துஆவை ஓத ஆரம்பிக்க, எல்லோரும் சேர்ந்து ஓதிவிட்டுக் கலைந்தனர்.

**பயிற்சி**

1. முஸ்லிம் குடும்பத்தில் வளர்க்கப்பட வேண்டிய பண்புகளை எடுத்துக் காட்டுக.
2. குடும்பத்தில் நிகழும் ஆன்மீக செயற்பாடுகள் சிலவற்றைக் குறிப்பிடுக.
3. குடும்பம் சீராக நடப்பதற்கு இக்பால் ஹாஜியாரினதும் அவரது நண்பரதும் குடும்பங்கள் எவ்வாறான நடவடிக்கைகளைச் செய்து வருகின்றன?
4. முஸ்லிம் வீடு எவ்வாறு அமைய வேண்டும் என்ற தலைப்பில் ஒரு கட்டுரை எழுதுக.